ஆசான்

217 Palali Rd, Kondavil 40062, Jaffna, Sri Lanka
+94 77 931 3910 · myaasaan.com
நிறுவனப் பதிவு இலக்கம்: PV 00273503

# ஆசான் - ஆசிரியர் வழிகாட்டி

ஆசிரியராகப் பதிவு செய்ய முன் இதை வாசியுங்கள்

**ஆசான்** என்பது இலங்கைத் தமிழ் மொழிமூல O/L மாணவர்களுக்கான AI கணித ஆசிரியர் உதவியாளர். மாணவர் பாடநூல் கேள்விகளைத் தானே தீர்க்கும்போது, ஒவ்வொரு படியையும் சரிபார்த்து, இலங்கைத் தமிழில் குறிப்புகளும் கேள்விகளும் தந்து வழிகாட்டும். **விடையை நேரடியாகச் சொல்லாது** – மாணவரைச் சிந்திக்க வைக்கும்.

ஆசான் உங்கள் கற்பித்தலுக்குப் **பதிலானது அல்ல, துணையானது**. வகுப்பில் நீங்கள் கற்பித்ததை மாணவர்கள் வீட்டில் பயிற்சி செய்யும்போது ஆசான் உதவும்; அவர்கள் எங்கே சிக்குகிறார்கள் என்பதை நீங்கள் பார்க்கலாம்.

## ஆசிரியருக்குக் கிடைப்பவை

- **உங்கள் சொந்த வகுப்புகள்** – எத்தனை வகுப்புகளையும் உருவாக்கலாம் (உதா. "தரம் 11 · சனி காலை").
- **மாணவர் அட்டைகள் (slips)** – பெயர்களைச் சேர்த்ததும் ஒவ்வொரு மாணவருக்கும் குறியீடு + PIN அட்டை print செய்யலாம்.
- **முன்னேற்றக் கண்காணிப்பு** – ஒவ்வொரு மாணவரும் எத்தனை கேள்விகள் தீர்த்தார், எங்கே சிக்கினார்.
- **பொதுவான பிழைகள்** – வகுப்பில் பலர் விடும் பிழைகள் ஒரே பார்வையில்; அடுத்த வகுப்பில் அவற்றைத் திருத்தலாம்.
- **"உதவவில்லை" எனக் குறிக்கப்பட்ட பதில்கள்** – மாணவர் திருப்தியில்லை எனக் குறித்த AI பதில்களை நீங்கள் பார்த்துக் கவனிக்கலாம்.

## பதிவு செய்வது எப்படி

**1. விண்ணப்பம்**
myaasaan.com → "ஆசிரியர் பதிவு" → பெயர், தொலைபேசி, பாடசாலை, பாடம், கடவுச்சொல்

**2. உறுதிப்படுத்தல்**
அலுவலகம் உங்கள் விபரங்களைச் சரிபார்க்கும் (தேவைப்பட்டால் தொலைபேசியில் தொடர்புகொள்ளும்)

**3. அனுமதி**
அனுமதி கிடைத்ததும் அதே இலக்கம், கடவுச்சொல்லுடன் உள்நுழையலாம்

**4. வகுப்பு**
"வகுப்பை உருவாக்கு" → மாணவர் பெயர்களைச் சேர்த்து அட்டைகளை print செய்யுங்கள்

## வகுப்புக் குறியீடும் PIN உம்

**வகுப்புக் குறியீடு**
**K7M2PQ**
வகுப்பறையின் கதவு இலக்கம் மாதிரி – அந்த வகுப்பில் உள்ள **எல்லோருக்கும் ஒன்றே**.

**PIN (4 இலக்கம்)**
**4821**
ஒவ்வொரு மாணவரின் சொந்தத் திறப்பு மாதிரி – **ஒவ்வொருவருக்கும் வேறு**.

217 Palali Rd, Kondavil 40062, Jaffna, Sri Lanka
+94 77 931 3910 · myaasaan.com
நிறுவனப் பதிவு இலக்கம்: PV 00273503

**முக்கியம்:** PIN ஒரு முறை மட்டுமே திரையில் காட்டப்படும் – மாணவர்களைச் சேர்த்ததும் அட்டைகளை உடனே print செய்யுங்கள். மாணவர் PIN ஐ மறந்தால், நீங்கள் புதிய PIN உருவாக்கலாம்; அவரின் முன்னேற்றம் அழியாது.

## மாணவர்கள் பயன்படுத்துவது எப்படி

- Phone அல்லது கணினியில் **myaasaan.com** → ”உள்நுழை” → ”மாணவர்” → வகுப்புக் குறியீடு + PIN.
- App தரவிறக்கம் தேவையில்லை. ”Add to Home Screen” செய்தால் app போலவே திறக்கும்.
- மாணவர் படிகளை type செய்யலாம், அல்லது கொப்பியில் எழுதிப் படம் எடுத்து அனுப்பலாம். தமிழ், Tanglish, English – எதில் எழுதினாலும் ஆசான் தமிழில் பதில் தரும்.
- ஒவ்வொரு மாணவருக்கும் நாளுக்கு **15 கேள்விகளுக்கு** AI உதவி. சரியான விடைகளை ஆசான் இலவசமாகவே சரிபார்க்கும்.

## ஆசிரியரின் பொறுப்புகள்

| விடயம் | செய்ய வேண்டியது |
|---|---|
| பெற்றோர் சம்மதம் | 18 வயதுக்குக் குறைந்த மாணவரைச் சேர்க்க முன், பெற்றோர் சம்மதம் பெறப்பட வேண்டும் (அலுவலகம் தரும் சம்மதப் படிவம், அல்லது பெற்றோரின் online பதிவு). |
| PIN பாதுகாப்பு | அட்டைகளை உரிய மாணவரிடம் மட்டும் கொடுங்கள். வகுப்பில் PIN களை உரத்து வாசிக்கவோ, குழுக்களில் பகிரவோ வேண்டாம். |
| உண்மையான மாணவர்கள் | உங்களிடம் கற்கும் மாணவர்களை மட்டுமே சேருங்கள். ஒருவருக்கு ஒரு கணக்கு மட்டும். |
| பிழையான AI பதில் | AI சில வேளை தவறலாம். ”உதவவில்லை” எனக் குறிக்கப்பட்டவற்றைப் பார்த்து, உண்மையான பிழை இருந்தால் அலுவலகத்துக்குத் தெரிவியுங்கள் – உள்ளடக்கம் திருத்தப்படும். |
| தனியுரிமை | மாணவர் தகவல்களை ஆசான் கற்பித்தலுக்கு மட்டுமே பயன்படுத்துங்கள்; வேறு யாருடனும் பகிர வேண்டாம். |

## ஆசான் செய்யாதவை

- விடையை நேரடியாகச் சொல்லாது (பல முறை முயன்ற பின் அடுத்த ஒரு படியை மட்டும் காட்டும்).
- கணிதக் கேள்விகளைத் தவிர வேறு உரையாடல்களில் ஈடுபடாது.
- மாணவரின் தொலைபேசி இலக்கமோ email ஓ சேகரிக்காது; விளம்பரம் இல்லை.

**அனுமதி பற்றி:** ஆசிரியர் கணக்குகள் அலுவலகத்தின் அனுமதியுடன் மட்டுமே திறக்கப்படும். விதிமுறைகளுக்கு மாறாகப் பயன்படுத்தினால் கணக்கு நிறுத்தப்படலாம். கேள்விகளுக்கு: **+94 77 931 3910** (WhatsApp) · myaasaan.com

”ஆசிரியர் பதிவு” செய்வதன் மூலம், இந்த வழிகாட்டியை வாசித்து அதன் விதிமுறைகளுக்கு உடன்படுகிறீர்கள்.